

புதுக்கும்மிடிப்பூண்டியில் காந்தி உலக மையம் சார்பில் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற பிளாஸ்டிக் விழிப்புணர்வுகள் பேரணி நடைப்பெற்ற போது எடுத்தப்படம்.

# புதுகும்மிடிப்பூண்டியில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி

பெரியபாளையம், மார்ச். 13-

புதுக்கும்மிடிப்பூண்டியில் உள்ள காந்தி உலக மையம் சார்பில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் புதுக்கும்மிடிப்பூண்டியில் காந்தி உலக மையம் என்ற அமைப்பு இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் சார்பில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் ஆதரஸ் வித்யா பள்ளியின் 78 மாணவர்கள் பங்கேற்று பிளாஸ்டிக்கை எரிக்காதே! கேன்சரை உருவாக்காதே!! பிளாஸ்டிக்கை ஒழிப்போம்! நீரவளம் காப்போம்!! குடிகுடியைக் கொடுக்கும்! பிளாஸ்டிக் பூமியையே கெடுக்கும்!! என்று கோஷம் எழுப்பினர் புதுகும்மிடிப் பூண்டியில் துவங்கிய மாணவர்களின் இப்பேரணி கும்மிடிப்பூண்டி பஸ் நிலையம் வழியாக ரெட்டம்பேடு சாலைவரையில் நடைபெற்றது. நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு இந்த அமைப்பின் நிறுவனர் ராஜேஷ் தலைமை தாங்கினார். மேலாண்மை இயக்குனர் விஜயலஷ்மி முன்னிலை வகித்தனர். முன்னதாக அனைவரையும் அறக்கட்டளை நிர்வாகிகள் சியாம்சுந்தர, திலீப் குமார் ஆகியோர் வரவேற்றனர். முடிவில் அறக்கட்டளை நிர்வாகி பிரமோத் நன்றி கூறினார்.

